हर हर शङ्कर

ॐ

जय जय शङ्कर



श्री-वेदव्यासाय नमः

# श्रीमद्-आद्य-शङ्कर-भगवत्पाद-परम्परागत-मूलाम्नाय-सर्वज्ञ-पीठं श्री-काञ्ची-कामकोटि-पीठं जगद्गुरु-श्री-शङ्कराचार्य-स्वामि-श्रीमठ-संस्थानम्

## श्रीमठीय-पञ्चाङ्ग-सदः वेद-धर्म-शास्त्र-परिपालन-सभा च

# ॥ विश्वावसु-कुम्भ-फाल्गुन-पूर्णिमा – चन्द्र-ग्रहणम् ॥

राहु-पुच्छ-("केतु"-)ग्रस्तम्। ३-मार्च्-२०२६।

वेद-धर्म-शास्त्र-परिपालन-सभा

9884655618 8072613857 vdspsabha@gmail.com vdspsabha.org

## ग्रहण-समयाः कार्यक्रमश्च (मार्च् ३)

| | | |
|---|---|---|
| ग्रहण-स्पर्शः (भारताद् अन्यत्र दृश्यः) | 15:20 | (पूर्णिमा-तिथौ) |
| ग्रहण-मोक्षः | 18:47 | (प्रथमा-तिथौ) |

| | | |
|---|---|---|
| चन्द्रोदयः | स्थल-समय-पट्टिका | आरम्भ-स्नानम् (सङ्कल्पः), तर्पणम् (सङ्कल्पः), जपः |
| उन्मीलनम् | १७:३३ | (चन्द्रोदयात् परं) दानम् (सङ्कल्पः) |
| मोक्षः | १८:४७ | मोक्ष-स्नानम् (सङ्कल्पः) |

| पीडितानि नक्षत्राणि | | | | |
|---|---|---|---|---|
| पूर्व-फल्गुनी*, मघा, उत्तर-फल्गुनी, पूर्वाषाढा, अपभरणी | | | | |
| **पीडिताः राशयः** | | | | |
| **अधिकम्** | सिंहः* | कन्या | मकरः | वृषभः |
| **मध्यमम्** | धनुः | कुम्भः | मेषः | कर्कटः |

(* = ग्रहणकालिकम्)

**शान्ति-श्लोकाः**

**एषां राशीनां शुभ-फलम्** – तुला, वृश्चिकः, मीनः, मिथुनम्।

## Contributors

**Guidance:** Brahmashri Sundararama Vajapeyi; **Compilation:** Brahmashri Shriramana Sharma; **Reference assistance:** Brahmashri Nidhishvara Shrauti; **Typesetting:** Prof Karthik Raman; **Technical assistance:** Smt Vidya Jayaraman;

**Translations** – English: Brahmashri Dr T Vasudevan, Telugu: Brahmashri Thanjavur Venkatesan, Malayalam: Vidvan Vasudevan Nambudiri, Kannada: Dr Ramprasad, Hindi: Kum Vanchitha Bharanidharan

# இந்த க்ரஹணத்திற்கான குறிப்புகள்

### ஆஹார நியமம்

- க்ரஹணத்திற்கு முந்தைய நாள் (திங்கள்) இரவு வரை உணவு அருந்தலாம். க்ரஹணத்தன்று (செவ்வாய்) விடியற்காலை முதல் ஆஹாரம் கிடையாது.
- நாள் முழுவதும் உபவாஸம் இருக்க முடியாவிடில் இயன்ற வரை முற்பகலிலேயே கஞ்சி போன்ற அல்ப ஆஹாரம் எடுத்துக்கொள்வது நடைமுறை. அதுவும் க்ரஹணத்துக்கு முந்தைய யாமத்தில் (சுமார் 2 ~ 3 மணிக்கு மேல்) கூடாது. கண்டிப்பாக க்ரஹணத்தின் போது எதுவும் கிடையாது.
- மோக்ஷ ஸ்நானத்திற்கு பிறகு சமையல் செய்து ஆஹாரம் எடுத்துக் கொள்ளலாம்.

### அனுஷ்டானம்

- க்ரஹணம் குறுகியதாக இருப்பதால் கீழ்க்கண்ட க்ரமத்தை பின்பற்றலாம்.
- அஸ்தமனத்திற்கு முன்பு ஸந்த்யா அர்க்ய ப்ரதானம். ஸூர்ய அஸ்தமனத்திற்கு (இம்முறை) சுமார் 6 நிமிடம் கழித்து வரும் சந்த்ர உதயத்திற்குள் ஸந்த்யா ஜபம், உபஸ்தானம், ஸந்த்யாவந்தனம் பூர்த்தி.
- சந்த்ர உதயம் ஆனவுடனேயே க்ரஹண ஆரம்ப ஸ்நானம், க்ரஹண ஶ்ராத்தம்/தர்ப்பணம், தானம். அவகாசப்படி விஶேஷ ஜபம். க்ரஹண மோக்ஷம் ஆனவுடன் மோக்ஷ ஸ்நானம். பிறகு மற்ற அனுஷ்டானங்கள், காரியங்கள்.
- அவரவர்கள் ஊரில் இருக்கும் க்ரஹண புண்ய காலத்திற்கேற்ப இயன்றதைச் செய்யலாம். குறைந்த பக்ஷம் க்ரஹண ஸ்நானம் செய்யலாம்.

- பௌர்ணமி திதிக்கு அன்றைய தினம் செய்ய வேண்டிய வார்ஷிகாதி ஶ்ராத்தத்தை மறுநாள் செய்ய வேண்டும்.

**சரியான அனுஷ்டான காலம்**

- பிற்பகலில் 3 மணிக்கு மேல் க்ரஹண ஆரம்பம் என்று பல பஞ்சாங்கங்களில் அல்லது ஊடகங்களில் செய்தி வந்துள்ளது. ஆனால் அச்சமயம் பாரதத்தில் சந்த்ர உதயமே ஆகியிருக்காது. ஆகவே அச்சமயத்தில் க்ரஹண அனுஷ்டானம் செய்ய இயலாது.
- அந்தந்த ஊரின் சந்த்ர உதயம் முதல் பொது க்ரஹண முடிவான 18:47 வரை மட்டுமே புண்ய காலம்.
- க்ரஹண முடிவுக்கு பிறகு சந்த்ர உதயம் ஏற்படும் ஊர்களில் க்ரஹண புண்ய காலமோ மேற்படி சொல்லப்பட்ட எந்த க்ரஹண நியம/அனுஷ்டானமோ கிடையாது.

**அடுத்து வரவிருக்கும் பாரதத்தில் தெரியக்கூடிய க்ரஹணங்கள்**

- அடுத்த ஸூர்ய க்ரஹணம் இரண்டு வருடங்கள் கழித்து ப்லவங்க ளூ கடக ஆஷாட அமாவாஸ்யை (2027 ஆகஸ்ட் 02).
- அடுத்த சந்த்ர க்ரஹணம் மூன்று வருடங்கள் கழித்து கீலக ளூ மிதுன ஆஷாட பௌர்ணமி (2028 ஜூலை 06).

☞ **प्रयोगः**

## அனைத்து க்ரஹணங்களுக்கான பொதுவான குறிப்புகள்

**ஜ்யௌதிஷ விவரம்**

- பூமியின் நிழல் சந்த்ரனில் விழுவதால் சந்த்ர க்ரஹணம் ஏற்படுகிறது. ஆகவே நாம் எங்கிருந்து பார்க்கிறோம் என்பதை வைத்து சந்த்ர க்ரஹண தொடக்க/முடிவு நேரங்கள் மாற மாட்டா.

- சந்த்ரனின் நிழல் பூமியில் விழுவதால் ஸூர்ய க்ரஹணம் ஏற்படுகிறது. இந்த நிழல் பூமியின் மீது நகருவதால், ஒவ்வோரிடத்திலும் ஸூர்ய க்ரஹண தொடக்க/முடிவு நேரங்கள் மாறுபடும்.

- அமாவாஸ்யா-ப்ரதமை அல்லது பௌர்ணமி-ப்ரதமைகளின் ஸந்திக்கு பர்வா என்று பெயர்.

- முழு பூமியைக் கருதினால், ஸூர்ய க்ரஹணம் இந்த பர்வாவிற்கு முன்பு அமாவாஸ்யையில் ஒரு இடத்தில் தொடங்கி ப்ரதமையில் மற்றொரு இடத்தில் முடியும். ஆனால் குறிப்பிட்ட ஊர்களின் விஷயம் வேறு. காலையில் ஏற்படும் க்ரஹணம் அமாவாஸ்யைக்குள்ளேயே ப்ரதமைக்கு முன்பு முடியலாம். மாலையில் ஏற்படும் க்ரஹணம் அமாவாஸ்யைக்கு பிறகு ப்ரதமையில் தொடங்கலாம்.

- சந்த்ர க்ரஹணத்திற்கோ முழு பூமிக்கும் ஒரே தொடக்க முடிவு நேரங்கள் ஆகையால், எப்பொழுதும் பர்வாவிற்கு முன்பு பௌர்ணமியில் தொடங்கி பின்பு ப்ரதமையில் முடியும்.

- க்ரஸ்த உதய விஷயத்தில், நமது ஊரில் ஸூர்யனோ சந்த்ரனோ உதயம் ஆவதற்கு முன்பு க்ரஹணம் ஆரம்பிக்கும். ஆனால் உதயம் முதல் தான் நமக்கு தெரியும் என்பது தெளிவு.

- க்ரஸ்த அஸ்தமன விஷயத்தில், நமது ஊரில் ஸூர்யனோ சந்த்ரனோ அஸ்தமனம் ஆன பின் க்ரஹணம் முடியும். ஆனால் அஸ்தமனம் வரை தான் நமக்கு தெரியும் என்பது தெளிவு.

- சந்த்ர க்ரஹண விஷயத்தில், (ஸூர்யனின் ஒரு பகுதி மட்டும் மறைக்கப்படும்) பூமியின் புறநிழலால் நமது கண்ணுக்கு புலனாகும்படி சந்த்ரன் நிறம் மாறுவதில்லை. ஆகவே இதற்கு அனுஷ்டானம் கிடையாது.

### போஜன நியமம்

- ஸூர்ய க்ரஹணம் ஏற்படும் யாமத்திற்கு முன் நான்கு யாமங்கள் (≈12 மணி நேரம்) ஆஹாரம் கூடாது. சந்த்ர க்ரஹணத்திற்கு மூன்று யாமங்கள் (≈9 மணி நேரம்) கூடாது.

- ஸூர்ய க்ரஸ்த உதயத்திற்கு முந்தைய இரவிலும் சந்த்ர க்ரஸ்த உதயத்திற்கு முந்தைய பகலிலும் ஆஹாரம் கூடாது.

- ஸூர்ய க்ரஸ்த அஸ்தமனத்திற்கு அடுத்த இரவிலும் சந்த்ர க்ரஸ்த அஸ்தமனத்திற்கு அடுத்த பகலிலும் ஆஹாரம் கூடாது.

- சிறு குழந்தைகள் (≈7 வயது), மிகவும் முதியவர்கள் (≈70 வயது), வியாதியஸ்தர்களுக்கு இந்த நியமம் கிடையாது. முழு பட்டினி கிடக்க இயலாதவர் பால் பழம் போன்ற லகு ஆஹாரத்தை ஏற்கலாம். அதுவும் க்ரஹணத்திற்கு முந்தைய யாமம் (≈3 மணி நேரம்) தவிர்க்க வேண்டியது.

- யாரானாலும் கண்டிப்பாக க்ரஹண புண்ய காலத்தில் ஆஹாரம் கூடாது.

- இந்த நியமம் எதுவும் பச்சிளம் குழந்தைகள் தாய்ப்பால் அருந்துவதற்குக் கிடையாது. குழந்தையின் வயதை அனுசரித்துக் கொள்ளலாம்.

- நீர், பக்குவமல்லாத (வேகவைத்து சமைக்கப்படாத) உணவு பொருட்கள் – இவற்றின் சுத்திக்காக அவற்றின் மேல் தர்ப்பைத்துண்டம் வைப்பது ஸம்ப்ரதாயம். இவற்றை க்ரஹணத்திற்கு பின் பயன்படுத்தலாம். ஆனால் க்ரஹணத்திற்கு முன்பு பக்குவம் செய்யப்பட்ட (வேகவைத்து சமைக்கப்பட்ட) பொருட்கள் க்ரஹணத்திற்குப் பிறகு உண்ணத்தக்கதல்ல.

### அனுஷ்டான ஆரம்பம்

- க்ரஹண ஆரம்பத்திற்கு முன்பாகவே மாற்று வஸ்த்ரம், அனுஷ்டானத்திற்குத் தேவையான ஆஸனம், தீர்த்த பாத்திரம் முதலியவற்றை எடுத்து வைத்துக்கொள்ளவும். தர்ப்பணம் செய்பவர்களும் அதற்கான

எள், கூர்ச்சம், தர்ப்பை, தர்ப்பண புஸ்தகங்கள் அனைத்தையும் எடுத்துவைத்துக்கொள்ளவும்.

- க்ரஹணம் தொடங்கியவுடன், கட்டிய வஸ்த்ரத்துடன் ஸ்நானம் செய்ய வேண்டும். க்ரஹண அனுஷ்டானத்திற்கு ஜலத்தை மடியாக எடுத்து வைத்துக்கொள்ளவும். முன்பே தனியாக எடுத்து வைக்கப்பட்ட வஸ்த்ரத்தை தரிக்கவும்.

**க்ரஹண ஆஶௌசம்**

- க்ரஹணம் முடிந்து மீண்டும் ஸ்நானம் ஆகும் வரை க்ரஹண நேரத்தில் சொல்லப்பட்ட காரியங்களுக்குத் தேவையானவற்றைத் தவிர மற்ற பொருட்களை – குறிப்பாக படுக்கை/ பாய்/துணிகள் போன்றவற்றைத் தொடக்கூடாது. தொட்டுவிட்டால் அவற்றை மீண்டும் தோய்த்து/அலசியே பயன்படுத்த வேண்டும். இந்த நியமத்திற்கு க்ரஹண ஆஶௌசம் என்று பெயர்.

- ஆனால் மற்ற ஆஶௌசம் அதாவது பிறப்பு/இறப்பு தீட்டு உள்ளவர்களானாலும் க்ரஹண அனுஷ்டானம் செய்வதற்கு அந்த காலத்திற்கு மட்டும் சுத்தி உண்டு. ஆகவே அவர்களும் யதாவத்தாக க்ரஹண அனுஷ்டானம் செய்ய வேண்டும். வீட்டிற்கு விலக்கானவர்களுக்கும் தனி நீரைக் கொண்டு க்ரஹண ஸ்நானம் உண்டு.

**க்ரஹண ஶ்ராத்தம்**

- க்ரஹண காலத்தில் முன்னோர்களுக்கு ஶ்ராத்தம் / தர்ப்பணம் அவசியம் செய்ய வேண்டும். இரவு வேளையில் ஏற்படும் சந்த்ர க்ரஹணத்திலும் இது உண்டு.

- ஸூர்ய க்ரஹண விஷயத்தில், அமாவாஸ்யை ஶ்ராத்தம்/தர்ப்பணம் செய்ய வேண்டிய அதே நாளன்று ஏற்பட்டால், இரண்டு கருத்துகள் உள்ளன.

- பல நூல்களில் க்ரஹண ஶ்ராத்தமும் அமாவாஸ்யை ஶ்ராத்தம் போலவே தான், அதாவது ஸ்த்ரீ வர்க்கத்தை பர்த்தாவுடன் சேர்த்து த்ருப்திபடுத்துவதே தவிர தனியாக வரணம் இல்லை என்று உள்ளது. அப்படியானால், க்ரஹண ஶ்ராத்தம் மட்டுமே செய்ய வேண்டும்.

- ஒரு ஸம்ப்ரதாயத்தில் க்ரஹண ஶ்ராத்தத்தில் (அமாவாஸ்யை ஶ்ராத்தத்தில் அல்ல) ஸ்த்ரீ வர்க்கத்தை தனியாக வரணம் செய்ய வேண்டும் என்று உள்ளது. அப்படியானால், க்ரஹண ஶ்ராத்தம் மற்றும் அமாவாஸ்யா ஶ்ராத்தங்களைத் தனித்தனியாக செய்ய வேண்டும்.

- அவரவர்கள் எந்த ஸம்ப்ரதாயப்படி க்ரஹண ஶ்ராத்தம் செய்கிறார்களோ அதன்படி நிர்ணயம் செய்துகொள்ளவும்.

- க்ரஹண ஶ்ராத்தத்தை க்ருஷ்ண பக்ஷத்தில் செய்யும் வழக்கம் உள்ளது, அதாவது ஸூர்ய க்ரஹணத்தில் அமாவாஸ்யை திதி முடியும் முன்பும் சந்த்ர க்ரஹணத்தில் பௌர்ணமி திதி முடிந்த பின்பும் என்றவாறு. க்ருஷ்ண பக்ஷம் பித்ருக்களுக்கு தொடர்புடையது என்பதால் இது இருக்கும் போலும். ஆனால் அவரவர் ஊரில் அமாவாஸ்யைக்கு பிறகு தொடங்கும் ஸூர்ய க்ரஹணம் விஷயத்தில் (முந்தைய "ஜ்யௌதிஷ விவரங்கள்" பகுதி பார்க்க) இது ஸாத்யம் ஆகாது. அவ்வாறே உதய அஸ்த நேரத்தில் நடக்கும் க்ரஹண விஷயத்தில் அது க்ருஷ்ண பக்ஷத்துக்கு உட்பட்டு (போதுமான அளவு) தெரியவில்லை என்றாலும் ஸாத்யமாகாமல் போகலாம். ஆகவே இருக்கும் நேரத்தில் ஸாத்யப்படி செய்ய வேண்டும்.

- க்ரஹணத்தன்று செய்ய வேண்டிய ப்ரத்யாப்திக ஶ்ராத்தத்தை மறுநாள் செய்ய வேண்டியிருக்கலாம். இது பற்றிய விவரம் பஞ்சாங்கங்களிலும் நாம் முன்பு கொடுத்திருக்கும் "இந்த க்ரஹணத்திற்கான குறிப்புகள்" பகுதியிலும் இருக்கும்.

**புண்ய காலத்தில் செய்ய வேண்டியவை/கூடாதவை**

- க்ரஹண சமயத்தில் வீண் காரியம் செய்வதைத் தவிர்க்கவும். இது ப்ரார்த்தனை வழிபாடுகளுக்கு உகந்த நேரம்.

- ஸந்த்யா காலத்தில் க்ரஹணம் ஏற்பட்டால் க்ரஹணத்தின் இடையேயும் ஸந்த்யாவந்தனம் அவசியம் செய்ய வேண்டும். ஸூர்ய உதய அஸ்தமனங்களுக்கு முன்பு அர்க்யம் கொடுத்து பிறகு ஜபம் செய்ய வேண்டும்.

- க்ரஹண நேரத்தில் ஜபம் செய்வது பன்மடங்கு பலனளிக்கும். மந்த்ர உபதேசம் பெறவும் சிறந்த தருணம் இது.

- க்ரஹண சமயத்தில் தூங்கவோ இயற்கை வேகங்களில் ஈடுபடவோ கூடாது. ஆகவே மல ஜலம் கழிப்பதையும் முன்பே செய்துகொள்வது நல்லது.

- க்ரஹண புண்ய காலத்தில் செய்யும் தானம் மிக அதிக புண்யம் கொடுக்கும். இயன்ற அளவு தானம் செய்யவும்.

- க்ரஹண புண்ய காலத்தில் அனைத்து ஜலமும் ஸ்நான அனுஷ்டானங்களுக்கு கங்கைக்கு ஸமம். அனைத்து வேதியர்களும் தானம் பெறுவதற்கு ப்ரஹ்மா அல்லது வ்யாஸருக்கு ஸமம். அனைத்து தானமும் பூ தானத்துக்கு ஸமம். அனைத்து ஊர்களும் குருக்ஷேத்ரத்திற்கு ஸமம். ஆகவே எவ்விடத்தில் இருந்தாலும் அவசியம் ஸ்நான தான ஜபாதிகளை செய்ய வேண்டும்.

- அஷ்ட திக்பாலகர்களையும் க்ரஹண தோஷ நிவ்ருத்தி ஏற்படும்படி ப்ரார்த்திக்கும் ஸ்தோத்ரத்தை வாசிக்க வேண்டும். (இந்த ஸ்தோத்ரம் பின்னர் கொடுக்கப்பட்டுள்ளது.)

- மிகச்சிறிய க்ரஹணங்கள் விஷயத்தில் என்ன ஸாத்யமோ அதைச் செய்யவும்: குறைந்த பக்ஷம் ஸங்க்ஷேபமான ஸங்கல்பத்துடன் ஆரம்ப ஸ்நானம் செய்து தானத்திற்கு ஏதாவது எடுத்து வைக்கவும். க்ரஹண ஶ்ராத்த/தர்ப்பணத்திற்கு ஸங்கல்பத்தையாவது புண்ய காலத்திற்குள் செய்துவிட்டால், எஞ்சியதை யதாசீக்கிரம் புண்ய காலம் முடிந்தாலும் பூர்த்தி செய்யலாம்.

- க்ரஹணத்தை கண்ணால் நேராக பார்க்கக்கூடாது. விரும்பினால் வஸ்த்ரத்தில் விழும் வெளிச்சத்தைக் கொண்டு பார்க்கலாம். அல்லது

(தெளிவாக இல்லாவிடில்) ஆகாசத்தில் உள்ளதை தைலத்திலோ ஜலத்திலோ கண்ணாடியிலோ ப்ரதிபலிக்கப்பட்டு பார்க்கலாம்.

- கர்ப்பிணீ ஸ்த்ரீகள் க்ரஹண ஸமயத்தில் ஸூர்ய சந்த்ரர்களின் ஒளி படாதபடி இருக்க வேண்டும். ஆகவே அவர்கள் டீவி முறையில் பார்ப்பதையும் தவிர்க்க வேண்டும். கர்ப்பத்தின் நலனை உத்தேசித்து அச்சமயம் பகவந்நாம ஜபம் அல்லது ஸ்தோத்ரம் முதலிய படனம் செய்வது சாலச்சிறந்ததாகும்.
- க்ரஹணம் முடிந்த பிறகு கட்டிய வஸ்த்ரத்துடன் ஸ்நானம் செய்ய வேண்டும். இந்த மோக்ஷ ஸ்நானம் மிகவும் முக்கியம். செய்யாவிட்டால் அடுத்த க்ரஹணம் வரை க்ரஹண ஆஶௌசம் தொடரும்.
- க்ரஸ்த அஸ்தமன விஷயத்திலும், ஶாஸ்த்ரப்படி அறியப்பட்ட மோக்ஷ காலத்திற்கு பிறகு மோக்ஷ ஸ்நானம் செய்ய வேண்டும். அதற்கு பிறகு தான் ஔபாஸநம் முதலிய ஸ்மார்த்த அனுஷ்டானங்களையோ ஸாயந்தோஹம் முதலிய ஶ்ரௌத அனுஷ்டானங்களையோ செய்யலாம்.

**க்ரஹண ஶாந்தி/பரிஹாரம்**

- எந்த ராசி/நக்ஷத்ரத்தில் க்ரஹணம் ஏற்படுகிறதோ அவற்றில் ஜனித்தவர்கள் இயன்றால் மறுநாள் ஹோம ரூபமான ஶாந்தியை செய்யலாம்.
- ஜன்ம ராசியிலிருந்து 3, 6, 10, 11வது ராசிகளில் க்ரஹணம் ஏற்பட்டால் சுப பலன் ஏற்படும். 2, 5, 7, 9வது ராசிகளில் ஏற்பட்டால் சற்று அசுபமான பலன் ஏற்படும். 1, 4, 8, 12வது ராசிகளில் ஏற்பட்டால் அதிக அசுப பலன் ஏற்படும்.
- இதையே க்ரஹண ராசியிலிருந்து கணக்கிட்டால்: 11, 8, 4, 3வது ராசிகளுக்கு சுப பலன். 12, 9, 7, 5வது ராசிகளுக்கு சற்று அசுப பலன். 1, 10, 6, 2வது ராசிகளுக்கு அதிக அசுப பலன்.
- எந்த நக்ஷத்ரத்தில் க்ரஹணம் ஏற்படுகிறதோ, அதுவும், அதற்கு முந்தைய பிந்தைய நக்ஷத்ரங்களும், அதிலிருந்தே 10வது (அனுஜன்ம) 19வது (த்ரிஜன்ம) நக்ஷத்ரங்களும் அசுப பலனைப் பெறுகின்றன.

- அதாவது அசுப பலன் பெறும் ராசி/நக்ஷத்ரங்களில் பிறந்தவர்களுக்கு பூர்வ கர்ம வினையால் சிரமங்கள் ஏற்படுவது ஸூசிக்கப்படுகிறது. ஆகவே அவர்கள் அதிக ப்ரயத்னத்துடன் ஷை க்ரஹண அனுஷ்டானங்களில் ஈடுபட வேண்டும், பரிஹாரம் செய்ய வேண்டும்.

- பரிஹாரத்தின் எளிய வடிவம் பின்னர் கொடுக்கப்பட்டுள்ளது.

**புண்ய கால நிர்ணயம்**

- ஸூர்ய சந்த்ரர்களை மேகம் முதலிய காரணத்தால் பார்க்க முடியாவிட்டாலும் ஜ்யௌதிஷ ஶாஸ்த்ர தீர்மானத்தின்படி க்ரஹணம் ஆரம்பிப்பதிலிருந்து முடியும் வரை புண்ய காலம்.

- க்ரஸ்தோதய விஷயத்தில் ஸூர்யனோ சந்த்ரனோ உதயமான பின் தான் புண்ய காலம். க்ரஸ்தாஸ்தமன விஷயத்தில் ஸூர்யனோ சந்த்ரனோ அஸ்தமனம் ஆகும் வரை தான் புண்ய காலம். பொதுவாகச் சொன்னால் க்ரஹணம் கண்ணுக்குத் தெரியக்கூடிய நேரம் தான் புண்ய காலம்.

- க்ரஸ்த அஸ்தமன விஷயத்தில், புண்ய காலம் முடிந்தாலும் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட ஸந்த்யா ஜபத்தை மோக்ஷ காலம் வரை தொடரவும்.

- க்ரஹண தர்ப்பணத்தை க்ருஷ்ண பக்ஷத்தில் செய்ய வேண்டும் என்ற வழக்கம் உள்ளது. ஆனால் முன்கூறியபடி அமாவாஸ்யை முடிந்த பிறகு ஸூர்ய க்ரஹணம் ஆரம்பிக்க வாய்ப்பிருப்பதால், மேலும் சந்த்ரனின் க்ரஸ்தாஸ்தமன விஷயத்தில், இது எப்பொழுதும் ஸாத்யம் என்று சொல்ல முடியாது. ஆனால் க்ரஹணம் ஏற்பட்டதற்கு அனுஷ்டானம் அவசியம் ஆகையால் க்ருஷ்ண பக்ஷம் இல்லாவிடினும் செய்ய வேண்டும்.

- ஸூர்ய க்ரஹணம் ஞாயிற்றுக்கிழமையன்று அல்லது சந்த்ர க்ரஹணம் திங்கட்கிழமையன்று (திங்கள் ஸூர்ய அஸ்தம் முதல் செவ்வாய் ஸூர்ய உதயம் வரை) ஏற்பட்டால் அதற்கு சூடாமணி க்ரஹணம் என்று பெயர். இந்த புண்ய காலம் அளவற்ற பலனளிப்பது.

- இங்கு கொடுக்கப்படக்கூடிய உதய/அஸ்தமன நேரங்கள் நமது ஸம்ப்ரதாயப்படி கணிக்கப்படுவன. இதில் தொடுவானத்தின் அருகே உள்ள காற்றினால் ஒளி வளைக்கப்படுவதான ஒளிமுறிவு கருதப்படுவதில்லை. ஏனெனில் அது இன்ன அளவு இருக்கும் என்று முன்பே தீர்மானிக்கவொண்ணாதது. நவீன பதிப்புகளில் தோராயமாக ஒளிமுறிவை கணக்கிட்டு உதயத்தை சில நிமிடங்கள் முன்பாகவும் அஸ்தமனத்தை சில நிமிடங்கள் பின்பாகவும் காட்டுகின்றன. அனுஷ்டானத்திற்கு, ஸம்ப்ரதாயப்படியான நேரங்களை எடுத்துக்கொள்ளவும்.

# ॥ ग्रहण-आरम्भ-स्नान-सङ्कल्पः ॥

आचमनम्। शुक्लाम्बरधरं + शान्तये। प्राणायामः।

**॥ स्वल्पकाल-ग्रहणे लघु-सङ्कल्पः ॥**

ममोपात्त-समस्त-दुरित-क्षय-द्वारा श्रीपरमेश्वर-प्रीत्यर्थं भारत-वर्षे भरत-खण्डे
(_____-नद्याः _____ तीरे / _____-पुण्य-तीर्थे)
**विश्वावसु**-नाम-संवत्सरे **उत्तरायणे शिशिर**-ऋतौ **कुम्भ-फाल्गुन**-मासे **कृष्ण**-पक्षे **प्रथमायां** शुभतिथौ **भौम**वासरयुक्तायां **पूर्वफल्गुनी**-नक्षत्रयुक्तायां **धृति**-योगयुक्तायां **बालव**-करणयुक्तायाम् एवं-गुण-विशेषण-विशिष्टायाम् अस्यां **प्रथमायां** शुभतिथौ - चन्द्र-ग्रहण-पुण्य-काले ग्रहण-आरम्भ-स्नानम् अहं करिष्ये।

**॥ दीर्घकाल-ग्रहणे महा-सङ्कल्पः ॥**

तदेव लग्नं सुदिनं तदेव ताराबलं चन्द्रबलं तदेव।
विद्याबलं दैवबलं तदेव लक्ष्मीपतेरङ्घ्रियुगं स्मरामि॥

अपवित्रः पवित्रो वा सर्वावस्थागतोऽपि वा।
यः स्मरेत्पुण्डरीकाक्षं स बाह्याभ्यन्तरः शुचिः॥

मानसं वाचिकं पापं कर्मणा समुपार्जितम्।
श्रीरामः स्मरणेनैव व्यपोहति न संशयः॥
श्रीराम राम राम।

तिथिर्विष्णुस्तथा वारो नक्षत्रं विष्णुरेव च।
योगश्च करणं चैव सर्वं विष्णुमयं जगत्॥
श्रीहरे गोविन्द गोविन्द गोविन्द।

ममोपात्त-समस्त-दुरित-क्षय-द्वारा श्रीपरमेश्वर-प्रीत्यर्थम्,

श्री-भगवतः विष्णोः नारायणस्य अचिन्त्यया अपरिमितया शक्त्या भ्रियमाणस्य महाजलौघस्य मध्ये परिभ्रमताम् **अनेककोटिब्रह्माण्डानाम् एकतमे** पृथिवी-अप्-तेजो-वायु-आकाश-अहङ्कार-महद्-अव्यक्तैः आवरणैः आवृते अस्मिन् महति ब्रह्माण्ड-करण्ड-मध्ये चतुर्दश-भुवन-अन्तर्गते भू-मण्डले जम्बू-प्लक्ष-शाक-शाल्मलि-कुश-क्रौञ्च-पुष्कराख्य-सप्त-द्वीप-मध्ये **जम्बू-द्वीपे** भारत-किम्पुरुष-हरि-इलावृत-रम्यक-हिरण्मय-कुरु-भद्राश्व-केतुमालाख्य-नव-वर्ष-मध्ये **भारत-वर्षे** इन्द्र-चेरु-ताम्र-गभस्ति-नाग-सौम्य-गन्धर्व-चारण-भरताख्य-नव-खण्ड-मध्ये **भरत-खण्डे** सुमेरु-निषद-हेमकूट-हिमाचल-माल्यवत्-पारियात्रक-गन्धमादन-कैलास-विन्ध्याचलादि-**अनेकपुण्यशैलानां मध्ये** दण्डकारण्य-चम्पकारण्य-विन्ध्यारण्य-वीक्षारण्य-श्वेतारण्य-वेदारण्यादि-**अनेकपुण्यारण्यानां मध्ये** कर्मभूमौ रामसेतुकेदारयोः मध्ये भागीरथी-यमुना-नर्मदा-त्रिवेणी-मलापहारिणी-गौतमी-कृष्णवेणी-तुङ्गभद्रा-कावेर्यादि-**अनेकपुण्यनदी-विराजिते** इन्द्रप्रस्थ-यमप्रस्थ-अवन्तिकापुरी-हस्तिनापुरी-अयोध्यापुरी-द्वारका-मथुरापुरी-मायापुरी-काशीपुरी-काञ्चीपुर्यादि-**अनेकपुण्यपुरी-विराजिते** –

सकल-जगत्-स्रष्टुः परार्धद्वय-जीविनः **ब्रह्मणः द्वितीय-परार्धे** पञ्चाशद्-अब्दादौ प्रथमे वर्षे प्रथमे मासे प्रथमे पक्षे प्रथमे दिवसे अह्नि द्वितीये यामे तृतीये मुहूर्ते स्वायम्भुव-स्वारोचिष-उत्तम-तामस-रैवत-चाक्षुषाख्येषु षट्सु मनुषु अतीतेषु सप्तमे **वैवस्वत-मन्वन्तरे** अष्टाविंशतितमे कलियुगे प्रथमे पादे अस्मिन् वर्तमाने व्यावहारिकाणां प्रभवादीनां षष्ट्याः संवत्सराणां मध्ये

**विश्वावसु**-नाम-संवत्सरे **उत्तरायणे शिशिर**-ऋतौ **कुम्भ-फाल्गुन**-मासे **कृष्ण**-पक्षे **प्रथमायां** शुभतिथौ **भौम**वासरयुक्तायां **पूर्वफल्गुनी**-नक्षत्रयुक्तायां **धृति**-योगयुक्तायां **बालव**-करणयुक्तायाम् एवं-गुण-विशेषण-विशिष्टायाम् अस्यां **प्रथमायां** शुभतिथौ –

अनादि-अविद्या-वासनया प्रवर्तमाने अस्मिन् महति संसारचक्रे विचित्राभिः

कर्मगतिभिः विचित्रासु योनिषु पुनःपुनः अनेकधा जनित्वा केनापि पुण्यकर्म-विशेषेण इदानीन्तन-मानुष-द्विजजन्म-विशेषं प्राप्तवतः मम –

जन्माभ्यासात् जन्मप्रभृति एतत्-क्षण-पर्यन्तं बाल्ये कौमारे यौवने मध्यमे वयसि वार्धके च जागृत्-स्वप्न-सुषुप्ति-अवस्थासु मनो-वाक्-कायाख्य-त्रिकरणचेष्टया कर्मेन्द्रिय-ज्ञानेन्द्रिय-व्यापारैः सम्भावितानाम् इह जन्मनि जन्मान्तरे च ज्ञानाज्ञान-कृतानां महापातकानां महापातक-अनुमन्तृत्वादीनां समपातकानाम् उपपातकानां मलिनीकरणानां गर्ह्यधन-आदान-उपजीवनादीनाम् अपात्रीकरणानां जातिभ्रंश-कराणां विहितकर्मत्याग-निन्दितसमाचरणादीनां ज्ञानतः सकृत् कृतानाम् अज्ञानतः असकृत् कृतानां सर्वेषां पापानां सद्यः अपनोदनार्थं –

महागणपत्यादि-समस्त-वैदिक-देवता-सन्निधौ (____-नद्याः पूर्वे / दक्षिणे / पश्चिमे / उत्तरे तीरे / ____-पुण्य-तीर्थे) चन्द्र-ग्रहण-पुण्य-काले ग्रहण-आरम्भ-स्नानम् अहं करिष्ये। (अप उपस्पृश्य।)

गङ्गा गङ्गेति यो ब्रूयाद्योजनानां शतैरपि।
मुच्यते सर्वपापेभ्यो विष्णुलोकं स गच्छति॥

गङ्गे च यमुने चैव गोदावरि सरस्वति।
नर्मदे सिन्धु कावेरि जलेऽस्मिन् सन्निधिं कुरु॥

अतिक्रूर महाकाय कल्पान्तदहनोपम।
भैरवाय नमस्तुभ्यम् अनुज्ञां दातुम् अर्हसि॥

(प्रोक्षण-मन्त्राः / स्नान-मन्त्राः)

(स्नात्वा वस्त्रं धृत्वा कुलाचारवत् पुण्ड्रधारणं च कृत्वा आचम्य जपं कुर्यात्।)

## ॥ तर्पण-सङ्कल्पः ॥

अपवित्रः पवित्रो वा + पुण्यतिथौ
(प्राचीनावीती) गोत्राणाम् + पुण्यतिथौ
चन्द्र-ग्रहण-पुण्य-काले वर्गद्वय-पितॄन् उद्दिश्य तिल-तर्पणं करिष्ये।

# ॥ ग्रहण-परिहारः ॥

| पीडितानि नक्षत्राणि | | | | |
|---|---|---|---|---|
| पूर्व-फल्गुनी*, मघा, उत्तर-फल्गुनी, पूर्वाषाढा, अपभरणी | | | | |
| पीडिताः राशयः | | | | |
| **अधिकम्** | सिंहः* | कन्या | मकरः | वृषभः |
| **मध्यमम्** | धनुः | कुम्भः | मेषः | कर्कटः |

(* = ग्रहणकालिकम्)

**इन्द्रोऽनलो दण्डधरश्च रक्षः प्राचेतसो वायु-कुबेर-शर्वाः।**
**मज्जन्म-ऋक्षे मम राशि-संस्थे चन्द्रोपरागं शमयन्तु सर्वे॥**

முன் கூறிய ராசி/நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் பரிஹாரம் செய்து கொள்ள வேண்டும். மேற்கண்ட ஶ்லோகத்தை ஒரு அட்டையிலோ ஓலையிலையோ எழுதி க்ரஹணகாலத்தில் சிறிதேனும் ஜபம் செய்து நெற்றியில் கட்டிக்கொள்ள வேண்டும்.

க்ரஹணம் சந்த்ரனுக்கு. சந்த்ர ப்ரீதிகரமான தானியம் நெல்.

ஆகவே கிரஹணம் முடிந்த பிறகு ஶ்லோகம் எழுதிய அட்டை அல்லது ஓலையுடன் இந்த தானியங்களையும் தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு தக்ஷிணை சேர்த்து அன்றோ மறுநாளோ தானம் செய்யவும்.

கீழே உள்ள எட்டு ஶ்லோகங்களை முடிந்த வரை பாராயணம் செய்யவும்.

# ॥ परिहार-स्तोत्रम् ॥

योऽसौ वज्रधरो देवः आदित्यानां प्रभुर्मतः।
सहस्रनयनः शक्रः ग्रहपीडां व्यपोहतु॥ १॥

मुखं यः सर्वदेवानां सप्तार्चिरमितद्युतिः।
चन्द्रसूर्योपरागोत्थाम् अग्निः पीडां व्यपोहतु॥ २॥

यः कर्मसाक्षी लोकानां यमो महिषवाहनः।
चन्द्रसूर्योपरागोत्थां ग्रहपीडां व्यपोहतु॥ ३॥

रक्षोगणाधिपः साक्षात् प्रलयानलसन्निभः।
उग्रः करालो निर्ऋतिः ग्रहपीडां व्यपोहतु॥४॥

नागपाशधरो देवः सदा मकरवाहनः।
वरुणो जललोकेशो ग्रहपीडां व्यपोहतु॥५॥

यः प्राणरूपो लोकानां वायुः कृष्णमृगप्रियः।
चन्द्रसूर्योपरागोत्थां ग्रहपीडां व्यपोहतु॥६॥

योऽसौ निधिपतिर्देवः खड्गशूलधरो वरः।
चन्द्रसूर्योपरागोत्थं कलुषं मे व्यपोहतु॥७॥

योऽसौ शूलधरो रुद्रः शङ्करो वृषवाहनः।
चन्द्रसूर्योपरागोत्थं दोषं नाशयतु द्रुतम्॥८॥

❁

## ॥ दान-सङ्कल्पः ॥

ममोपात्त + प्रीत्यर्थं ____गोत्रोद्भवस्य / गोत्रोद्भवायाः ____नक्षत्रे ____राशौ जातस्य / जातायाः ____-शर्मणः / -नाम्नः / -नाम्न्याः चन्द्र-ग्रहण-कालिक-राशि-नक्षत्रादि-सूचिततया सम्भावितस्य सर्वविधस्य अनिष्टस्य परिहारार्थं यथाशक्ति हिरण्यदानं करिष्ये।

हिरण्यगर्भ-गर्भस्थं हेमबीजं विभावसोः।
अनन्त-पुण्य-फलदम् अतः शान्तिं प्रयच्छ मे॥


____गोत्रोद्भवस्य / गोत्रोद्भवायाः ____नक्षत्रे ____राशौ जातस्य / जातायाः ____-शर्मणः / -नाम्नः / -नाम्न्याः चन्द्र-ग्रहण-कालिक-राशि-नक्षत्रादि-सूचिततया सम्भावितस्य सर्वविधस्य अनिष्टस्य परिहारार्थम् इदं हिरण्यं सदक्षिणाकं सताम्बूलं ब्राह्मणाय – तुभ्यम् / मनसा उद्दिष्टाय / यस्मै कस्मै चिद् – अहं सम्प्रददे न मम॥

## ॥ मोक्ष-स्नान-सङ्कल्पः ॥

ममोपात्त-समस्त-दुरित-क्षय-द्वारा श्रीपरमेश्वर-प्रीत्यर्थं चन्द्र-ग्रहण-मोक्ष-स्नानं करिष्ये।

❁❁❁

# பல்வேறு இடங்களுக்கான க்ரஹண நேரங்கள்




மேலே உள்ள வரைபடம் க்ரஹணம் தெரியும் மற்றும் தெரியாத இடங்களைக் காட்டுகிறது. கோட்டிற்கு கிழக்கே (வலது) உள்ள இடங்களில் க்ரஹணம் தெரியும். கோட்டிற்கு மேற்கே (இடது) உள்ள இடங்களில் தெரியாது.

மேலும் விவரங்களுக்கு கூகுள் வரைபடம்: (☞ இங்கே கிளிக் செய்யவும்)

கீழே உள்ள பட்டியலில் இல்லாத பிற இடங்களில் க்ரஹணம் தெரிகிறதா என்பதை அறிய இந்த வரைபடத்தை பெரிதாக்கலாம். அந்த ஊர்களின் சந்த்ர உதயத்தை அறிய அருகில் உள்ள ஊர்களைக் கொண்டு அனுமானித்துக்கொள்ளவும்.

ப்ராசீன பாரதத்தின் 400+ இடங்களுக்கான நேரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. க்ரஹணம் தெரியாத இடங்களுக்கு (எ.கா. மும்பை) சந்த்ர உதயம் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது.

| Sthala | Chan-drodaya | Moksha | Punya Kala | Pari-mana |
|---|---|---|---|---|
| **Andhra Pradesh** | | | | |
| Addanki | 18:21 | 18:47 | 00:26 | 0.40 |
| Adoni | 18:32 | 18:47 | 00:15 | 0.23 |
| Amalapuram | 18:12 | 18:47 | 00:35 | 0.52 |
| Amaravati | 18:18 | 18:47 | 00:29 | 0.43 |

| Sthala | Chan-drodaya | Moksha | Punya Kala | Pari-mana |
|---|---|---|---|---|
| Amudalavalasa | 18:03 | 18:47 | 00:44 | 0.64 |
| Anakapalle | 18:07 | 18:47 | 00:40 | 0.59 |
| Anantapur | 18:31 | 18:47 | 00:16 | 0.24 |
| Badvel | 18:25 | 18:47 | 00:22 | 0.33 |
| Bapatla | 18:19 | 18:47 | 00:28 | 0.43 |
| Bhimavaram | 18:14 | 18:47 | 00:33 | 0.49 |
| Bhimunipatnam | 18:05 | 18:47 | 00:41 | 0.61 |
| Bobbili | 18:05 | 18:47 | 00:42 | 0.62 |
| Chilakalurupet | 18:20 | 18:47 | 00:27 | 0.41 |
| Chimakurti | 18:21 | 18:47 | 00:26 | 0.39 |
| Chirala | 18:19 | 18:47 | 00:28 | 0.42 |
| Chittoor | 18:25 | 18:47 | 00:21 | 0.33 |
| Dharmavaram | 18:31 | 18:47 | 00:16 | 0.25 |
| Ellore | 18:16 | 18:47 | 00:31 | 0.47 |
| Emmiganur | 18:31 | 18:47 | 00:16 | 0.24 |
| Giddalur | 18:25 | 18:47 | 00:22 | 0.33 |
| Gudivada | 18:16 | 18:47 | 00:31 | 0.46 |
| Guntakal | 18:32 | 18:47 | 00:15 | 0.23 |
| Guntur | 18:19 | 18:47 | 00:28 | 0.43 |
| Hindupur | 18:32 | 18:47 | 00:15 | 0.23 |
| Jammalamadugu | 18:28 | 18:47 | 00:19 | 0.29 |
| Kadapa | 18:26 | 18:47 | 00:21 | 0.32 |
| Kadiri | 18:29 | 18:47 | 00:18 | 0.28 |
| Kakinada | 18:11 | 18:47 | 00:36 | 0.54 |
| Kandukur | 18:21 | 18:47 | 00:26 | 0.39 |
| Kavali | 18:21 | 18:47 | 00:26 | 0.39 |
| Koilkuntla | 18:28 | 18:47 | 00:19 | 0.29 |
| Kovvur | 18:13 | 18:47 | 00:34 | 0.51 |
| Kurnool | 18:29 | 18:47 | 00:18 | 0.28 |
| Macherla | 18:23 | 18:47 | 00:24 | 0.37 |
| Machilipatnam | 18:16 | 18:47 | 00:31 | 0.47 |
| Madanapalle | 18:28 | 18:47 | 00:19 | 0.29 |
| Mandapeta | 18:12 | 18:47 | 00:35 | 0.52 |
| Mangalagiri | 18:18 | 18:47 | 00:29 | 0.44 |
| Markapur | 18:24 | 18:47 | 00:23 | 0.35 |
| Nagari | 18:23 | 18:47 | 00:23 | 0.36 |
| Nandyal | 18:27 | 18:47 | 00:20 | 0.30 |

| Sthala | Chandrodaya | Moksha | Punya Kala | Parimana |
|---|---|---|---|---|
| Narasannapeta | 18:03 | 18:47 | 00:44 | 0.65 |
| Narasapur | 18:13 | 18:47 | 00:33 | 0.50 |
| Narasaraopet | 18:20 | 18:47 | 00:27 | 0.40 |
| Nellore | 18:21 | 18:47 | 00:25 | 0.39 |
| Nidadavole | 18:13 | 18:47 | 00:34 | 0.50 |
| Ongole | 18:21 | 18:47 | 00:26 | 0.40 |
| Palakollu | 18:13 | 18:47 | 00:34 | 0.51 |
| Palamaneru | 18:27 | 18:47 | 00:20 | 0.31 |
| Pamidi | 18:31 | 18:47 | 00:16 | 0.25 |
| Pedana | 18:16 | 18:47 | 00:31 | 0.47 |
| Pithapuram | 18:11 | 18:47 | 00:36 | 0.54 |
| Ponnuru | 18:18 | 18:47 | 00:29 | 0.43 |
| Proddatur | 18:27 | 18:47 | 00:20 | 0.30 |
| Pulivendla | 18:29 | 18:47 | 00:18 | 0.28 |
| Punganuru | 18:28 | 18:47 | 00:19 | 0.30 |
| Puttur | 18:24 | 18:47 | 00:23 | 0.36 |
| Rajamahendravaram | 18:13 | 18:47 | 00:34 | 0.51 |
| Rayachoti | 18:27 | 18:47 | 00:20 | 0.31 |
| Repalle | 18:17 | 18:47 | 00:30 | 0.45 |
| Samalkot | 18:11 | 18:47 | 00:36 | 0.53 |
| Sattenapalle | 18:20 | 18:47 | 00:27 | 0.41 |
| Srikakulam | 18:03 | 18:47 | 00:44 | 0.64 |
| Tadepalle | 18:18 | 18:47 | 00:29 | 0.44 |
| Tadepallegudem | 18:14 | 18:47 | 00:33 | 0.49 |
| Tadpatri | 18:29 | 18:47 | 00:18 | 0.27 |
| Tanuku | 18:13 | 18:47 | 00:34 | 0.51 |
| Tenali | 18:18 | 18:47 | 00:29 | 0.44 |
| Tirupati | 18:24 | 18:47 | 00:23 | 0.35 |
| Tuni | 18:09 | 18:47 | 00:37 | 0.56 |
| Venkatagiri | 18:23 | 18:47 | 00:24 | 0.36 |
| Vijayawada | 18:18 | 18:47 | 00:29 | 0.44 |
| Vinukonda | 18:22 | 18:47 | 00:25 | 0.38 |
| Vishakhapatnam | 18:06 | 18:47 | 00:41 | 0.60 |
| Vizianagaram | 18:05 | 18:47 | 00:41 | 0.61 |
| **Arunachal Pradesh** | | | | |
| Itanagar | 17:18 | 18:47 | 01:28 | 1.11 |
| **Assam** | | | | |

| Sthala | Chandrodaya | Moksha | Punya Kala | Parimana |
|---|---|---|---|---|
| Dibrugarh | 17:13 | 18:47 | 01:34 | 1.14 |
| Dispur | 17:27 | 18:47 | 01:20 | 1.05 |
| Gauripur | 17:34 | 18:47 | 01:13 | 0.99 |
| Guwahati | 17:27 | 18:47 | 01:20 | 1.05 |
| Jorhat | 17:16 | 18:47 | 01:31 | 1.12 |
| Silchar | 17:23 | 18:47 | 01:24 | 1.08 |
| Tezpur | 17:22 | 18:47 | 01:25 | 1.09 |
| **Bihar** | | | | |
| Aurangabad | 17:58 | 18:47 | 00:49 | 0.71 |
| Begusarai | 17:51 | 18:47 | 00:56 | 0.81 |
| Bhagalpur | 17:47 | 18:47 | 01:00 | 0.85 |
| Deo | 17:58 | 18:47 | 00:49 | 0.71 |
| Gaya | 17:55 | 18:47 | 00:51 | 0.74 |
| Muzaffarpur | 17:53 | 18:47 | 00:54 | 0.77 |
| Patna | 17:55 | 18:47 | 00:52 | 0.76 |
| Purnea | 17:45 | 18:47 | 01:02 | 0.87 |
| Rajgir | 17:54 | 18:47 | 00:53 | 0.77 |
| Saharsa | 17:48 | 18:47 | 00:58 | 0.83 |
| **Chandigarh** | | | | |
| Chandigarh | 18:27 | 18:47 | 00:20 | 0.31 |
| **Chhattisgarh** | | | | |
| Bhilai | 18:12 | 18:47 | 00:35 | 0.52 |
| Bilaspur | 18:09 | 18:47 | 00:38 | 0.56 |
| Durg | 18:13 | 18:47 | 00:34 | 0.51 |
| Raipur | 18:11 | 18:47 | 00:36 | 0.53 |
| **Dadra, Nagar Haveli, Daman and Diu** | | | | |
| Daman | 18:48 | — | — | — |
| **Delhi** | | | | |
| New Delhi | 18:26 | 18:47 | 00:21 | 0.32 |
| **Goa** | | | | |
| Curchorem | 18:45 | 18:47 | 00:01 | 0.03 |
| Panaji | 18:46 | 18:47 | 00:00 | 0.01 |
| **Gujarat** | | | | |
| Ahmedabad | 18:48 | — | — | — |
| Bhavnagar | 18:50 | — | — | — |
| Bhuj | 18:59 | — | — | — |
| Daman | 18:48 | — | — | — |

| Sthala | Chan-drodaya | Moksha | Punya Kala | Pari-mana |
|---|---|---|---|---|
| Dholka | 18:49 | — | — | — |
| Dwarka | 19:03 | — | — | — |
| Gandhinagar | 18:48 | — | — | — |
| Godhra | 18:44 | 18:47 | 00:03 | 0.05 |
| Jamnagar | 18:59 | — | — | — |
| Jasdan | 18:54 | — | — | — |
| Khambhat | 18:48 | — | — | — |
| Khed Brahma | 18:46 | 18:47 | 00:01 | 0.03 |
| Mahesana | 18:49 | — | — | — |
| Nandod | 18:45 | 18:47 | 00:02 | 0.04 |
| Navsari | 18:48 | — | — | — |
| Porbandar | 19:01 | — | — | — |
| Rajkot | 18:56 | — | — | — |
| Sihor | 18:51 | — | — | — |
| Surat | 18:48 | — | — | — |
| Vadodara | 18:46 | 18:47 | 00:01 | 0.02 |
| **Haryana** | | | | |
| Ambala | 18:27 | 18:47 | 00:20 | 0.31 |
| Bhiwani | 18:30 | 18:47 | 00:16 | 0.26 |
| Faridabad | 18:26 | 18:47 | 00:21 | 0.33 |
| Gurgaon | 18:27 | 18:47 | 00:20 | 0.31 |
| Hisar | 18:32 | 18:47 | 00:15 | 0.23 |
| Karnal | 18:26 | 18:47 | 00:20 | 0.31 |
| Panchkula | 18:26 | 18:47 | 00:20 | 0.31 |
| Panipat | 18:27 | 18:47 | 00:20 | 0.31 |
| Rohtak | 18:28 | 18:47 | 00:18 | 0.28 |
| Sirsa | 18:35 | 18:47 | 00:12 | 0.19 |
| Sonipat | 18:27 | 18:47 | 00:20 | 0.31 |
| **Himachal Pradesh** | | | | |
| Shimla | 18:25 | 18:47 | 00:22 | 0.34 |
| Solan | 18:25 | 18:47 | 00:22 | 0.33 |
| **Jammu and Kashmir** | | | | |
| Bandipura | 18:33 | 18:47 | 00:13 | 0.21 |
| Baramula | 18:35 | 18:47 | 00:12 | 0.19 |
| Gilgit | 18:34 | 18:47 | 00:13 | 0.20 |
| Handwara | 18:35 | 18:47 | 00:12 | 0.19 |
| Jammu | 18:34 | 18:47 | 00:13 | 0.21 |

| Sthala | Chan-drodaya | Moksha | Punya Kala | Pari-mana |
|---|---|---|---|---|
| Kulgam | 18:32 | 18:47 | 00:14 | 0.23 |
| Mirpur | 18:38 | 18:47 | 00:09 | 0.14 |
| Muzaffarabad | 18:38 | 18:47 | 00:08 | 0.14 |
| Rajaori | 18:35 | 18:47 | 00:11 | 0.18 |
| Skardu | 18:29 | 18:47 | 00:18 | 0.28 |
| Sopur | 18:34 | 18:47 | 00:13 | 0.20 |
| Srinagar | 18:33 | 18:47 | 00:14 | 0.22 |
| Udhampur | 18:32 | 18:47 | 00:15 | 0.23 |
| **Jharkhand** | | | | |
| Chakradharpur | 17:54 | 18:47 | 00:53 | 0.76 |
| Dhanbad | 17:50 | 18:47 | 00:57 | 0.81 |
| Jamshedpur | 17:52 | 18:47 | 00:55 | 0.79 |
| Ranchi | 17:55 | 18:47 | 00:52 | 0.75 |
| **Karnataka** | | | | |
| Belgaum | 18:43 | 18:47 | 00:03 | 0.06 |
| Bellary | 18:34 | 18:47 | 00:13 | 0.21 |
| Bengaluru | 18:32 | 18:47 | 00:15 | 0.23 |
| Bidar | 18:30 | 18:47 | 00:17 | 0.26 |
| Bijapur | 18:38 | 18:47 | 00:09 | 0.14 |
| Channarayapatna | 18:37 | 18:47 | 00:10 | 0.16 |
| Davangere | 18:38 | 18:47 | 00:09 | 0.14 |
| Gulbarga | 18:33 | 18:47 | 00:14 | 0.22 |
| Hassan | 18:38 | 18:47 | 00:09 | 0.14 |
| Hospet | 18:36 | 18:47 | 00:11 | 0.17 |
| Hubli | 18:41 | 18:47 | 00:06 | 0.10 |
| Kolar | 18:30 | 18:47 | 00:17 | 0.27 |
| Mandya | 18:35 | 18:47 | 00:12 | 0.19 |
| Mangaluru | 18:43 | 18:47 | 00:04 | 0.06 |
| Mysore | 18:36 | 18:47 | 00:11 | 0.17 |
| Raichur | 18:31 | 18:47 | 00:15 | 0.24 |
| Shimoga | 18:40 | 18:47 | 00:07 | 0.11 |
| Shrirangapattana | 18:36 | 18:47 | 00:11 | 0.17 |
| Tumkur | 18:34 | 18:47 | 00:13 | 0.21 |
| Udipi | 18:43 | 18:47 | 00:03 | 0.06 |
| **Kerala** | | | | |
| Alappuzha | 18:38 | 18:47 | 00:08 | 0.13 |
| Angamali | 18:38 | 18:47 | 00:09 | 0.14 |

| Sthala | Chan-drodaya | Moksha | Punya Kala | Pari-mana |
|---|---|---|---|---|
| Kochi | 18:39 | 18:47 | 00:08 | 0.13 |
| Kollam | 18:38 | 18:47 | 00:09 | 0.14 |
| Kozhikode | 18:40 | 18:47 | 00:07 | 0.11 |
| Palakkad | 18:37 | 18:47 | 00:10 | 0.16 |
| Pathanamthitta | 18:37 | 18:47 | 00:10 | 0.16 |
| Thrissur | 18:39 | 18:47 | 00:08 | 0.13 |
| Tiruvanantapuram | 18:37 | 18:47 | 00:10 | 0.16 |
| **Ladakh** | | | | |
| Leh | 18:21 | 18:47 | 00:25 | 0.39 |
| **Madhya Pradesh** | | | | |
| Bhopal | 18:28 | 18:47 | 00:19 | 0.29 |
| Burhanpur | 18:34 | 18:47 | 00:13 | 0.20 |
| Gwalior | 18:23 | 18:47 | 00:24 | 0.36 |
| Indore | 18:35 | 18:47 | 00:12 | 0.19 |
| Jabalpur | 18:17 | 18:47 | 00:29 | 0.44 |
| Khajuraho | 18:17 | 18:47 | 00:30 | 0.46 |
| Maihar | 18:13 | 18:47 | 00:33 | 0.50 |
| Mandsaur | 18:37 | 18:47 | 00:10 | 0.15 |
| Ratlam | 18:38 | 18:47 | 00:09 | 0.15 |
| Sannai | 18:13 | 18:47 | 00:34 | 0.50 |
| Saugor | 18:22 | 18:47 | 00:25 | 0.38 |
| Ujjain | 18:35 | 18:47 | 00:12 | 0.19 |
| Umaria | 18:13 | 18:47 | 00:33 | 0.50 |
| Vidisha | 18:26 | 18:47 | 00:21 | 0.32 |
| **Maharashtra** | | | | |
| Ahilyanagar | 18:41 | 18:47 | 00:06 | 0.10 |
| Akola | 18:31 | 18:47 | 00:16 | 0.25 |
| Amravati | 18:28 | 18:47 | 00:19 | 0.30 |
| Bhayandar | 18:49 | — | — | — |
| Bhiwandi | 18:48 | — | — | — |
| Bhusaval | 18:36 | 18:47 | 00:11 | 0.18 |
| Chanda | 18:22 | 18:47 | 00:25 | 0.38 |
| Chinchvad | 18:45 | 18:47 | 00:02 | 0.04 |
| Dharashiv | 18:36 | 18:47 | 00:11 | 0.17 |
| Dhulia | 18:40 | 18:47 | 00:07 | 0.11 |
| Ichalkaranji | 18:43 | 18:47 | 00:04 | 0.06 |
| Jalgaon | 18:37 | 18:47 | 00:10 | 0.16 |

| Sthala | Chan-drodaya | Moksha | Punya Kala | Pari-mana |
|---|---|---|---|---|
| Junnar | 18:44 | 18:47 | 00:02 | 0.04 |
| Kalyan | 18:47 | — | — | — |
| Kolhapur | 18:44 | 18:47 | 00:03 | 0.05 |
| Latur | 18:34 | 18:47 | 00:13 | 0.21 |
| Malegaon | 18:41 | 18:47 | 00:06 | 0.10 |
| Mumbai | 18:49 | — | — | — |
| Nagpur | 18:22 | 18:47 | 00:25 | 0.38 |
| Nanded | 18:30 | 18:47 | 00:17 | 0.26 |
| Nasik | 18:44 | 18:47 | 00:02 | 0.04 |
| Parbhani | 18:32 | 18:47 | 00:14 | 0.22 |
| Pune | 18:45 | 18:47 | 00:02 | 0.04 |
| Sambhajinagar | 18:38 | 18:47 | 00:09 | 0.14 |
| Sangli | 18:43 | 18:47 | 00:04 | 0.07 |
| Solapur | 18:37 | 18:47 | 00:10 | 0.16 |
| Thane | 18:48 | — | — | — |
| Ulhasnagar | 18:47 | — | — | — |
| Uran | 18:48 | — | — | — |
| Yavatmal | 18:26 | 18:47 | 00:21 | 0.32 |
| **Manipur** | | | | |
| Imphal | 17:18 | 18:47 | 01:29 | 1.11 |
| **Meghalaya** | | | | |
| Shillong | 17:27 | 18:47 | 01:20 | 1.05 |
| **Mizoram** | | | | |
| Aizawl | 17:24 | 18:47 | 01:23 | 1.07 |
| **Nagaland** | | | | |
| Kohima | 17:17 | 18:47 | 01:30 | 1.12 |
| **Orissa** | | | | |
| Bhubaneshwar | 17:54 | 18:47 | 00:52 | 0.76 |
| Brahmapur | 17:59 | 18:47 | 00:48 | 0.70 |
| Cuttack | 17:54 | 18:47 | 00:53 | 0.76 |
| Jatani | 17:55 | 18:47 | 00:52 | 0.75 |
| Puri | 17:55 | 18:47 | 00:52 | 0.75 |
| Raurkela | 17:57 | 18:47 | 00:49 | 0.72 |
| Sambalpur | 18:01 | 18:47 | 00:45 | 0.67 |
| **Puducherry** | | | | |
| Puducherry | 18:23 | 18:47 | 00:24 | 0.36 |
| **(Eastern) Punjab** | | | | |

| Sthala | Chandrodaya | Moksha | Punya Kala | Parimana |
|---|---|---|---|---|
| Abohar | 18:37 | 18:47 | 00:09 | 0.15 |
| Amritsar | 18:34 | 18:47 | 00:13 | 0.20 |
| Haripur | 18:30 | 18:47 | 00:17 | 0.27 |
| Jalandhar | 18:31 | 18:47 | 00:16 | 0.24 |
| Ludhiana | 18:30 | 18:47 | 00:16 | 0.25 |
| Malaut | 18:36 | 18:47 | 00:10 | 0.16 |
| Mauli | 18:27 | 18:47 | 00:20 | 0.31 |
| Pathankot | 18:30 | 18:47 | 00:16 | 0.25 |
| Patiala | 18:28 | 18:47 | 00:18 | 0.28 |
| **Rajasthan** | | | | |
| Abu | 18:47 | 18:47 | 00:00 | 0.01 |
| Ajmer | 18:38 | 18:47 | 00:09 | 0.14 |
| Alwar | 18:29 | 18:47 | 00:18 | 0.28 |
| Bharatpur | 18:26 | 18:47 | 00:21 | 0.33 |
| Bhilwara | 18:38 | 18:47 | 00:08 | 0.14 |
| Bikaner | 18:42 | 18:47 | 00:04 | 0.07 |
| Chittaurgarh | 18:39 | 18:47 | 00:08 | 0.13 |
| Jaipur | 18:32 | 18:47 | 00:14 | 0.22 |
| Jaisalmer | 18:53 | — | — | — |
| Jalor | 18:47 | 18:47 | 00:00 | 0.01 |
| Jodhpur | 18:45 | 18:47 | 00:02 | 0.04 |
| Kota | 18:33 | 18:47 | 00:13 | 0.21 |
| Pali | 18:44 | 18:47 | 00:03 | 0.06 |
| Sikar | 18:35 | 18:47 | 00:12 | 0.18 |
| Tonk | 18:33 | 18:47 | 00:14 | 0.21 |
| Udaipur | 18:43 | 18:47 | 00:04 | 0.07 |
| **Sikkim** | | | | |
| Gangtok | 17:39 | 18:47 | 01:08 | 0.94 |
| **Tamil Nadu** | | | | |
| Ariyalur | 18:27 | 18:47 | 00:20 | 0.31 |
| Chengalpattu | 18:22 | 18:47 | 00:25 | 0.38 |
| Chennai | 18:21 | 18:47 | 00:26 | 0.40 |
| Dharmapuri | 18:30 | 18:47 | 00:17 | 0.26 |
| Dindukkal | 18:32 | 18:47 | 00:15 | 0.24 |
| Erode | 18:32 | 18:47 | 00:15 | 0.23 |
| Kadalur (Cuddalore) | 18:23 | 18:47 | 00:23 | 0.36 |
| Kallakurichi | 18:27 | 18:47 | 00:20 | 0.31 |

| Sthala | Chan-drodaya | Moksha | Punya Kala | Pari-mana |
|---|---|---|---|---|
| Kanchipuram | 18:23 | 18:47 | 00:24 | 0.36 |
| Karur | 18:31 | 18:47 | 00:16 | 0.25 |
| Kodaikanal | 18:34 | 18:47 | 00:13 | 0.21 |
| Kovai (Coimbatore) | 18:35 | 18:47 | 00:11 | 0.18 |
| Krishnagiri | 18:29 | 18:47 | 00:17 | 0.27 |
| Kumbakonam | 18:25 | 18:47 | 00:22 | 0.33 |
| Madurai | 18:31 | 18:47 | 00:16 | 0.25 |
| Mayiladuthurai | 18:24 | 18:47 | 00:23 | 0.35 |
| Nagapattinam | 18:24 | 18:47 | 00:23 | 0.36 |
| Nagarkovil | 18:35 | 18:47 | 00:12 | 0.19 |
| Namakkal | 18:30 | 18:47 | 00:17 | 0.26 |
| Perambalur | 18:27 | 18:47 | 00:20 | 0.30 |
| Pudukkottai | 18:28 | 18:47 | 00:19 | 0.29 |
| Rajapalaiyam | 18:33 | 18:47 | 00:13 | 0.21 |
| Ramanathapuram | 18:28 | 18:47 | 00:19 | 0.29 |
| Rameswaram | 18:26 | 18:47 | 00:20 | 0.31 |
| Ranipettai | 18:25 | 18:47 | 00:22 | 0.34 |
| Salem | 18:30 | 18:47 | 00:17 | 0.26 |
| Sivagangai | 18:30 | 18:47 | 00:17 | 0.27 |
| Thanjavur | 18:26 | 18:47 | 00:20 | 0.31 |
| Theni | 18:34 | 18:47 | 00:13 | 0.21 |
| Thenkasi | 18:35 | 18:47 | 00:12 | 0.19 |
| Thoothukudi | 18:31 | 18:47 | 00:15 | 0.24 |
| Tiruchirapalli | 18:28 | 18:47 | 00:19 | 0.29 |
| Tirunelveli | 18:33 | 18:47 | 00:14 | 0.21 |
| Tiruppattur | 18:28 | 18:47 | 00:19 | 0.29 |
| Tiruppur | 18:34 | 18:47 | 00:13 | 0.21 |
| Tiruvallur | 18:22 | 18:47 | 00:25 | 0.38 |
| Tiruvannamalai | 18:26 | 18:47 | 00:21 | 0.32 |
| Tiruvarur | 18:24 | 18:47 | 00:22 | 0.34 |
| Udhagamandalam (Ooty) | 18:36 | 18:47 | 00:11 | 0.17 |
| Valparai | 18:36 | 18:47 | 00:11 | 0.18 |
| Vellore | 18:25 | 18:47 | 00:21 | 0.33 |
| Virudhunagar | 18:32 | 18:47 | 00:15 | 0.23 |
| Vizhuppuram | 18:24 | 18:47 | 00:22 | 0.34 |
| **Telangana** | | | | |
| Adilabad | 18:25 | 18:47 | 00:22 | 0.34 |

| Sthala | Chan-drodaya | Moksha | Punya Kala | Pari-mana |
|---|---|---|---|---|
| Armur | 18:26 | 18:47 | 00:20 | 0.31 |
| Belampalli | 18:21 | 18:47 | 00:26 | 0.39 |
| Bhagyanagaram (Hyderabad) | 18:26 | 18:47 | 00:21 | 0.32 |
| Bhainsa | 18:28 | 18:47 | 00:19 | 0.30 |
| Bodhan | 18:28 | 18:47 | 00:19 | 0.29 |
| Bodupal | 18:26 | 18:47 | 00:21 | 0.32 |
| Devarkonda | 18:25 | 18:47 | 00:22 | 0.34 |
| Gadwal | 18:30 | 18:47 | 00:17 | 0.27 |
| Jaggayyapeta | 18:20 | 18:47 | 00:27 | 0.41 |
| Jagtial | 18:24 | 18:47 | 00:23 | 0.35 |
| Jangaon | 18:23 | 18:47 | 00:24 | 0.36 |
| Kagaznagar | 18:21 | 18:47 | 00:26 | 0.39 |
| Kamareddipet | 18:26 | 18:47 | 00:21 | 0.32 |
| Karimnagar | 18:23 | 18:47 | 00:24 | 0.36 |
| Khammam | 18:19 | 18:47 | 00:27 | 0.42 |
| Koratla | 18:25 | 18:47 | 00:22 | 0.34 |
| Kothapet | 18:21 | 18:47 | 00:26 | 0.39 |
| Kottagudem | 18:17 | 18:47 | 00:30 | 0.45 |
| Mahbubnagar | 18:29 | 18:47 | 00:18 | 0.28 |
| Mancheral | 18:21 | 18:47 | 00:25 | 0.39 |
| Mandamari | 18:21 | 18:47 | 00:26 | 0.39 |
| Mangur | 18:16 | 18:47 | 00:31 | 0.46 |
| Metpalli | 18:25 | 18:47 | 00:22 | 0.33 |
| Nalgonda | 18:23 | 18:47 | 00:24 | 0.36 |
| Nizamabad | 18:27 | 18:47 | 00:20 | 0.30 |
| Palwancha | 18:17 | 18:47 | 00:30 | 0.45 |
| Ramagundam | 18:22 | 18:47 | 00:25 | 0.39 |
| Sirsilla | 18:24 | 18:47 | 00:23 | 0.34 |
| Suriapet | 18:22 | 18:47 | 00:25 | 0.38 |
| Vikarabad | 18:29 | 18:47 | 00:18 | 0.28 |
| Wanaparti | 18:28 | 18:47 | 00:18 | 0.28 |
| Warangal | 18:21 | 18:47 | 00:26 | 0.39 |
| Yellandu | 18:18 | 18:47 | 00:28 | 0.43 |
| **Tripura** | | | | |
| Agartala | 17:30 | 18:47 | 01:17 | 1.03 |
| **Uttar Pradesh** | | | | |
| Agra | 18:23 | 18:47 | 00:23 | 0.36 |

| Sthala | Chandrodaya | Moksha | Punya Kala | Parimana |
|---|---|---|---|---|
| Aligarh | 18:23 | 18:47 | 00:24 | 0.37 |
| Ayodhya | 18:06 | 18:47 | 00:41 | 0.60 |
| Bahraigh | 18:08 | 18:47 | 00:39 | 0.58 |
| Bareilly | 18:17 | 18:47 | 00:30 | 0.45 |
| Budaun | 18:18 | 18:47 | 00:28 | 0.43 |
| Bulandshahr | 18:23 | 18:47 | 00:23 | 0.36 |
| Etawah | 18:19 | 18:47 | 00:27 | 0.42 |
| Fatehpur | 18:12 | 18:47 | 00:34 | 0.51 |
| Fatehpur Sikri | 18:25 | 18:47 | 00:22 | 0.34 |
| Firozabad | 18:22 | 18:47 | 00:25 | 0.38 |
| Ghaziabad | 18:25 | 18:47 | 00:22 | 0.33 |
| Gorakhpur | 18:01 | 18:47 | 00:46 | 0.67 |
| Hapur | 18:24 | 18:47 | 00:23 | 0.35 |
| Hathras | 18:23 | 18:47 | 00:24 | 0.36 |
| Jaunpur | 18:05 | 18:47 | 00:42 | 0.62 |
| Jhansi | 18:22 | 18:47 | 00:25 | 0.38 |
| Kairana | 18:26 | 18:47 | 00:21 | 0.33 |
| Kanpur | 18:14 | 18:47 | 00:33 | 0.49 |
| Lakhnau (Lucknow) | 18:11 | 18:47 | 00:35 | 0.53 |
| Mathura | 18:25 | 18:47 | 00:22 | 0.34 |
| Meerut | 18:24 | 18:47 | 00:23 | 0.35 |
| Mirzapur | 18:05 | 18:47 | 00:41 | 0.61 |
| Moradabad | 18:19 | 18:47 | 00:27 | 0.42 |
| Muzaffarnagar | 18:23 | 18:47 | 00:23 | 0.36 |
| Pilibhit | 18:15 | 18:47 | 00:32 | 0.48 |
| Prayagraj | 18:08 | 18:47 | 00:38 | 0.57 |
| Rampur | 18:18 | 18:47 | 00:29 | 0.43 |
| Saharanpur | 18:24 | 18:47 | 00:23 | 0.35 |
| Sambhal | 18:20 | 18:47 | 00:26 | 0.40 |
| Shahjanpur | 18:15 | 18:47 | 00:32 | 0.48 |
| Sitalpur | 18:12 | 18:47 | 00:35 | 0.52 |
| Varanasi | 18:04 | 18:47 | 00:43 | 0.64 |
| Vrindavan | 18:24 | 18:47 | 00:22 | 0.34 |
| **Uttarakhand** | | | | |
| Dehradun | 18:22 | 18:47 | 00:25 | 0.38 |
| Naini Tal | 18:16 | 18:47 | 00:31 | 0.46 |
| **West Bengal** | | | | |

| Sthala | Chan-drodaya | Moksha | Punya Kala | Pari-mana |
|---|---|---|---|---|
| Alipur Duar | 17:36 | 18:47 | 01:11 | 0.97 |
| Asansol | 17:48 | 18:47 | 00:59 | 0.84 |
| Baharampur | 17:42 | 18:47 | 01:04 | 0.90 |
| Baidyabati | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Bali | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Balurghat | 17:40 | 18:47 | 01:07 | 0.93 |
| Bangaon | 17:41 | 18:47 | 01:06 | 0.92 |
| Bankura | 17:48 | 18:47 | 00:59 | 0.84 |
| Bansbaria | 17:42 | 18:47 | 01:04 | 0.90 |
| Barasat | 17:42 | 18:47 | 01:04 | 0.90 |
| Barddhaman | 17:44 | 18:47 | 01:02 | 0.88 |
| Basirhat | 17:40 | 18:47 | 01:06 | 0.92 |
| Bhadreswar | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Bhatpara | 17:42 | 18:47 | 01:05 | 0.90 |
| Champdani | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Chandannagar | 17:42 | 18:47 | 01:04 | 0.90 |
| Dam Dam | 17:42 | 18:47 | 01:04 | 0.90 |
| Darjeeling | 17:41 | 18:47 | 01:06 | 0.92 |
| Durgapur | 17:47 | 18:47 | 01:00 | 0.85 |
| Habra | 17:41 | 18:47 | 01:05 | 0.91 |
| Haldia | 17:44 | 18:47 | 01:03 | 0.88 |
| Halisahar | 17:42 | 18:47 | 01:05 | 0.90 |
| Haora | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Hugli | 17:42 | 18:47 | 01:04 | 0.90 |
| Ingraj Bazar | 17:42 | 18:47 | 01:04 | 0.90 |
| Jalpaiguri | 17:39 | 18:47 | 01:08 | 0.94 |
| Jamuria | 17:47 | 18:47 | 00:59 | 0.84 |
| Jaynagar-Majilpur | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Kalyani | 17:42 | 18:47 | 01:05 | 0.90 |
| Kamarhati | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Kanchrapara | 17:42 | 18:47 | 01:05 | 0.90 |
| Kharagpur | 17:47 | 18:47 | 01:00 | 0.85 |
| Khardah | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Kolkata | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Krishnanagar | 17:42 | 18:47 | 01:05 | 0.91 |
| Kulti | 17:48 | 18:47 | 00:58 | 0.83 |
| Madhyamgram | 17:42 | 18:47 | 01:05 | 0.90 |

| Sthala | Chandrodaya | Moksha | Punya Kala | Parimana |
|---|---|---|---|---|
| Medinipur | 17:47 | 18:47 | 01:00 | 0.85 |
| Naihati | 17:42 | 18:47 | 01:05 | 0.90 |
| Navadwip | 17:42 | 18:47 | 01:05 | 0.90 |
| Panihati | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Raiganj | 17:42 | 18:47 | 01:05 | 0.90 |
| Rishra | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Shantipur | 17:42 | 18:47 | 01:05 | 0.91 |
| Shiliguri | 17:40 | 18:47 | 01:07 | 0.92 |
| Shrirampur | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Titagarh | 17:43 | 18:47 | 01:04 | 0.90 |
| Uluberiya | 17:44 | 18:47 | 01:03 | 0.89 |
| **East Bengal** | | | | |
| Chattogram (Chittagong) | 17:28 | 18:47 | 01:18 | 1.04 |
| Dhaka | 17:34 | 18:47 | 01:13 | 0.99 |
| Sylhet | 17:27 | 18:47 | 01:20 | 1.05 |
| **Bhutan** | | | | |
| Thimphu | 17:35 | 18:47 | 01:12 | 0.98 |
| **Nepal** | | | | |
| Biratnagar | 17:45 | 18:47 | 01:02 | 0.87 |
| Birgunj | 17:55 | 18:47 | 00:52 | 0.75 |
| Butwal | 18:00 | 18:47 | 00:46 | 0.68 |
| Dhangadhi | 18:12 | 18:47 | 00:35 | 0.52 |
| Janakpur | 17:51 | 18:47 | 00:56 | 0.80 |
| Kathmandu | 17:53 | 18:47 | 00:54 | 0.78 |
| Lalitpur | 17:53 | 18:47 | 00:54 | 0.78 |
| Nepalgunj | 18:08 | 18:47 | 00:39 | 0.58 |
| Pokhara | 17:58 | 18:47 | 00:49 | 0.71 |
| **Gandhara** | | | | |
| Charsadda | 18:46 | 18:47 | 00:01 | 0.02 |
| Peshawar | 18:47 | 18:47 | 00:00 | 0.01 |
| Takshashila | 18:42 | 18:47 | 00:05 | 0.09 |
| **Western Punjab** | | | | |
| Lahore (Lavapura) | 18:36 | 18:47 | 00:10 | 0.17 |
| Multan (Mulasthana) | 18:49 | — | — | — |
| **Sindh** | | | | |
| Karachi | 19:10 | — | — | — |
| Larkana | 19:04 | — | — | — |


9884655618 8072613857 vdspsabha@gmail.com vdspsabha.org

| Sthala | Chan-drodaya | Moksha | Punya Kala | Pari-mana |
|---|---|---|---|---|
| Sukkur | 19:01 | — | — | — |
| **Balochistan** | | | | |
| Gwadar | 19:30 | — | — | — |
| Quetta | 19:08 | — | — | — |
| Hinglaj Mata | 19:21 | — | — | — |